# 907

## பிப்ரவரி 2020

*படிக்க நேரம்* - ஏழு நிமிடங்கள்

*விரிவெழுத்தில் எழுத நேரம்* - ஒரு மணி 30 நிமிடங்கள்

(பெரும மதிப்பெண்கள்: 100)

கண்காணிப்பாளர் கவனத்திற்கு

1. பின்வரும் உரைப் பகுதியைத் தெளிவான, உரத்தக் குரலில், ஒரு தடவை மட்டுமே, எந்த ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ திரும்பப் படிக்காமலும், நிறுத்தக் குறிகள் எதையும் குறிப்பிடாமலும், தேர்வு எழுதுவோர்க்குப் படிக்க வேண்டும்.

2. இவ்வுரைப் பகுதி நிமிடத்திற்கு 90 **சொற்கள்** (மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு சொல் என்று கணக்கிடும் முறையில்) வீதம், நிமிடப் பகுதிகளாகவும், ஒவ்வொரு நிமிடப் பகுதியும் மீண்டும் கால் நிமிடப் பகுதிகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. படிப்பவர், வினாடி முள் கொண்ட கைக்கடிகாரத்தை வைத்துக் கொண்டு, படிக்கும்பொழுதே ஒவ்வொரு கால் நிமிடத்திலும் மொழியின் வேகம் சரியாக உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

3. படிக்கப்பட்டதைச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொள்ள வேண்டுமென்றும், சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டதை, அதற்கு **நேரான விரிவெழுத்தில்** எழுத வேண்டுமென்றும் தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

4. படிக்க ஆரம்பிக்கும் முன்னரே, படிப்பவர் வினாடி முள் கொண்ட கைக்கடிகாரத்தின் உதவியுடன் உரைப்பகுதி முழுவதையும் படித்துப் பார்த்து, குறிப்பிட்ட வேகத்தில் படிப்பதற்குத் தம்மைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. விடை எழுத அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், தேர்வு எழுதுவோர் தாங்கள் எழுதிய சுருக்கெழுத்துக் குறிப்பேட்டையும், விடைத்தாளையும் ஒன்றாக இணைத்துக் கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

6. சுருக்கெழுத்துத் திறனுக்காக பத்து மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று மொழிவுக்கு முன்னரே தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

7. "விரிவெழுத்தில் எழுதும்போது, கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வரிகளுக்கிடையே உரிய இடைவெளி இருக்க வேண்டும்" என்று தேர்வு எழுதுவோர்க்கு அறிவிக்கப்பட வேண்டும்.

* * *

நண்பர்களே,

நாட்டில் இன்று உள்ள முக்கியமான பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண, என்னை அழைத்து, கைத்தறி விழாவில் பங்குபெறச் செய்ததற்கு ந/ன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி என்று நான் சொல்லும்போது, அது லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையை, அவர்களின் எதிர்காலத்தை//உள்ளடக்கியது ஆகும். கைத்தறி நெசவாளர்களுக்கு நிம்மதி ஏற்படவும், அவர்களுடைய சிக்கல்களைத் தீர்க்கவும் இத்தகைய கண்காட்சிகள் ந///டைபெறுகின்றன. கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் வாழ்வாங்கு வாழ மக்கள் அனைவரும் ஆதரவு அளித்திட வேண்டும். கைத்தறித் தொழிலில் ஈடுப(1)ட்டுள்ளவர்கள் எத்தகைய தியாகங்களைச் செய்கிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க மறந்துவிடக் கூடாது.

வெளி நாட்டினரும் நமது நாட்டி/ல் இருப்பவர்களும் கைத்தறித் துணிகளை வாங்கி, நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். அவர்களுக்கு இந்த நேரத்தி//ல் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் கடமையாற்றுவதைப் பாராட்டுவதைவிட, அவர்களை வாழவைக்கும் நல்ல எண்ணம் ஏற்///பட்டு இருப்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். இந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஒவ்வொருவரும் செயல்பட்டால், கைத்தறித் தொழிலி(2)ல் ஈடுபட்டிருப்பவர்களின் வாழ்க்கையில் துன்பங்களோ தொல்லைகளோ ஏற்படாது.

கைத்தறி நெசவாளர்கள் மச்சு வீட்டில் வாழ முடியாவிட்டாலும், குச்சு/வீட்டிலாவது அவர்களை வாழவைக்க வேண்டாமா? அவர்கள் துணிகளை நெய்யும்போது, ஒரு இழை அறுந்து விட்டாலும், அதைச் சரிப்படுத்த எவ்வளவு கஷ்டப்ப//டுகிறார்கள் என்பது நேரில் பார்ப்பவர்களுக்குத் தான் தெரியும். அப்படிக் கஷ்டப்பட்டு உருவாக்குகிற துணிகளை நாம் வாங்கி ஆதரவு



[திருப்புக...

அளிப்பது///நம் கடமை ஆகும். துணி வாங்க நாம் கொடுக்கிற பணத்தால் பயன் அடைபவர்கள் யார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். சுதந்திரப் போராட்ட காலத்(3)தில் மகாத்மா காந்தி ஒரு தத்துவத்தைச் சொன்னார். நம் நாட்டின் பொருளாதாரம் வெள்ளையர்களால் சுரண்டப்படுகிறது என்பதற்கு உதாரணமாக அதைக்/குறிப்பிட்டார். அதாவது அவர்கள் நமது நாட்டில் உற்பத்தியாகும் பஞ்சை வெளி நாட்டிற்கு எடுத்துச்சென்று, அங்கே ஆலைகளில் நூற்று, துணியாக்கி, திரும்//ப நமது நாட்டிற்குத் துணியைக் கொண்டுவந்து, நம்மிடமே விற்று, கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகையால், நாமே பஞ்சை நூலாக்கி, கைத்தறி மூலம் துணி நெ///ய்து, ஆடை தயாரித்துக் கொள்வோம் என்ற தத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார். அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களும் கைத்தறித் தொழிலுக்கு முன்(4)னுரிமை அளித்தார்கள் என்பதோடு, கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட/விருப்புகிறேன்.

நாம் தர்மம் செய்கிறோம் என்றால், அந்த தர்மம் எதற்குப் பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பள்ளி மாணவனுக்கு படி//ப்பதற்குப் பணம் கொடுத்து உதவுகிறோம் என்றால், அது தர்மம். அந்த மாணவன் படித்துப் பட்டம் பெற்று, தன்னைப் போல பலரை உருவாக்கக் காரணமாக இருப்பான். நாம் செய்///கிற தர்மம் எதற்குப் பயன்படுகிறது என்று பார்க்க வேண்டியது மிக அவசியம். நாம் கொடுக்கிற காசில் கள்ளக்கோல் வாங்கினால், அது தர்மம் அல்ல. (5)

* * *

கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை அவர்கள் செயலாளர், நிதித் துறை, சென்னை அவர்களுக்கு எழுதும் கடிதம்.

ஐயா,

சார் நிலை பணியாளர்களுக்கான/ கணக்குத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் வரும் மே மாதம் முதல் தேதி ஆரம்பிக்கப்படும். ஆதலால் இம்மாதம் முதல் வாரத்திற்குள் உங்கள் துறை//யிலிருந்து அவ்வகுப்புகளில் சேர விரும்புவோருடைய பட்டியலையும் மனுக்களையும் சென்னை, சம்பளக் கணக்காயருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்///கொள்கிறேன்.

வகுப்புகளுக்கு வருகை தருவது கட்டாயம் என்று வகுப்பில் சேர விரும்புவோருக்குத் தெரிவிக்க வேண்டும். வகுப்புகளுக்கு வராதவர்கள்(6) மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் எந்த இடத்தில் நடக்கும் வகுப்பில் சேர விரும்புகிறார்கள் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

உங்கள் துறையிலிருந்து அனுப்பப்படும் மனுக்கள்//எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அனுப்பவும். மனுக்கள் அனுப்புவதற்கான கடைசி நாள் இம்மாதம் ஏழாம் தேதி ஆகும். வகுப்புகள் ஆரம்பிக்க///ப்படும் என்பதற்கான சரியான தேதி பின் சென்னை, சம்பளக் கணக்காய்வாளரால் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

தங்கள் நம்பிக்கையுள்ள, (7)

# 835

## பிப்ரவரி 2020

*படிக்க நேரம்* - ஏழு நிமிடங்கள்
*விரிவெழுத்தில் எழுத நேரம்* - ஒரு மணி 15 நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்: 100)

**கண்காணிப்பாளர் கவனத்திற்கு**

1. பின்வரும் உரைப் பகுதியைத் தெளிவான, உரத்தக் குரலில், ஒரு தடவை மட்டுமே, எந்த ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ திரும்பப் படிக்காமலும், நிறுத்தக் குறிகள் எதையும் குறிப்பிடாமலும், தேர்வு எழுதுவோர்க்குப் படிக்க வேண்டும்.

2. இவ்வுரைப் பகுதி நிமிடத்திற்கு **70 சொற்கள்** (மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு சொல் என்று கணக்கிடும் முறையில்) வீதம், நிமிடப் பகுதிகளாகவும், ஒவ்வொரு நிமிடப் பகுதியும் மீண்டும் கால் நிமிடப் பகுதிகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. படிப்பவர், வினாடி முள் கொண்ட கைக்கடிகாரத்தை வைத்துக் கொண்டு, படிக்கும்பொழுதே ஒவ்வொரு கால் நிமிடத்திலும் மொழியின் வேகம் சரியாக உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

3. படிக்கப்பட்டதைச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொள்ள வேண்டுமென்றும், சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டதை, அதற்கு **நேரான விரிவெழுத்தில்** எழுத வேண்டுமென்றும் தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

4. படிக்க ஆரம்பிக்கும் முன்னரே, படிப்பவர் வினாடி முள் கொண்ட கைக்கடிகாரத்தின் உதவியுடன் உரைப்பகுதி முழுவதையும் படித்துப் பார்த்து, குறிப்பிட்ட வேகத்தில் படிப்பதற்குத் தம்மைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. விடை எழுத அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், தேர்வு எழுதுவோர் தாங்கள் எழுதிய சுருக்கெழுத்துக் குறிப்பேட்டையும், விடைத்தாளையும் ஒன்றாக இணைத்துக் கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

6. சுருக்கெழுத்துத் திறனுக்காக **பத்து** மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று மொழிவுக்கு முன்னரே தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

7. "விரிவெழுத்தில் எழுதும்போது, கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வரிகளுக்கிடையே உரிய இடைவெளி இருக்க வேண்டும்" என்று தேர்வு எழுதுவோர்க்கு அறிவிக்கப்பட வேண்டும்.

---

தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் கொண்டு வந்துள்ள வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல / முன் வந்துள்ளேன். இந்த ஐந்து வருஷத் திட்டத்தை அமுல்படுத்தும்போது, நமது மாநிலத்தில் மழை இல்லாமல் இருந்தா//லும், இரண்டு மூன்று வருஷங்களில் செய்ய வேண்டியதை இந்த வருஷமே செய்து முடிக்க முன்வந்ததைக் கண்டு நான் மகி///ழ்ச்சி அடைவதோடு, அது மிகவும் வரவேற்கத் தக்கது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இந்த ஐந்து வருஷத் திட்டத்தின் (1) கீழ் புதியதாகக் கொண்டு வரப்படும் நீர்ப்பாசன வேலைகளையும், மின்சார வசதிகளையும் நகரங்களில் செய்வதைவி/ட கிராமங்களில் செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவதாக, நீர்ப்பாசனத்தை எ//டுத்துக்கொண்டால், அது குறித்து பெரிய பெரிய திட்டங்களை எடுத்து அமுல்படுத்துகிறார்கள். அவைகள் எல்லாம் மெச்///சத்தக்க திட்டங்கள்தான். எங்களுடைய பகுதியில் அநேக பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போய்விட்டன. குள(2)ங்களிலும் ஏரிகளிலும் தண்ணீர் இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஏரிகள் உடைந்து சாலைகள் எல்லாம் மூடிப்/போய் விட்டன. ஒரு வருஷத்திற்கு வேண்டிய பயிர்களைக்



[*திருப்புக...*

கூட எழுப்ப முடியாமல் தண்ணீர் எல்லாம் காலியாகி விட்டது. அ//தனால் மழை பெய்யும் காலங்களில் மழைத் தண்ணீரை ஏரிகளுக்கு விட்டு வைத்தால் உதவியாக இருக்கும் என்பதைத் தெரி///வித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்போது மின்சார வசதி பொரும்பாலும் நகரங்களுக்கு மட்டும் செய்து கொடுக்கி(3)றார்கள். கிராமங்களில் விவசாயம் செய்வதற்கு அதிகப்படியான மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகையால்/ கிராமங்களுக்கும் போதிய மின்சார வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொ//ள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிநீர் வசதிபற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் மக்கள் குடிநீ///ர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் தொத்து நோய் மிகவும் பரவி வருகிறது. ஆகவே ஒவ்வொரு கி(4)ராமத்திற்கும் குடிநீர் வசதி செய்து கொடுப்பது மிக முக்கியமாகும். குடிநீர் வசதி செய்து கொடுத்தால், தொத்து நோய் ப/ரவு வதைத் தடுக்க முடியும் என நம்புகிறேன்.

பஞ்சப் பிரதேசங்களில் உள்ள விவசாயப் பயிர்களுக்கு ஒருவித நோ//ய் பரவி வருகிறது. அதை நிவர்த்தி செய்யவோ தடுக்கவோ எந்த விதமான மருந்தும் கொடுப்பதில்லை. இதுகுறித்து அர///சு தக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.(5)

பரமக்குடி, முருகன் கூட்டமைப்பிலிருந்து, மதுரை, மாதவன் கூட்டமைப்பிற்கு எழுதும் கடிதம்.

அன்புடையீர்,

தங்க/ளுடைய இருபதாம் தேதியிட்ட கடிதம் கிடைத்தது. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் கூட்டமைப்பைப்பற்றி நீங்கள் கேட்கு//ம் உறுதியை நாங்கள் அளிக்க இயலாமல் இருக்கிறோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சில ஆண்டு///களுக்கு முன்பு அந்த நிறுவனத்தின் மூத்த/ கூட்டாளி இயற்கை எய்தும் வரை, அந்தக் கூட்டமைப்புக்கு நற்பெயர் இரு(6)ந்தது. அதன் பிறகு அவர்களுடைய விவகாரங்கள் திருப்திகரமாக இல்லை. எங்களுக்குத் தெரிந்தவரை, அவர்களு/டைய தற்போதைய நிதி நிலைமை பத்திரமாக இல்லை. இந்த நிலையில் அவர்களுடன் ரொக்க விவகாரம்தான் நாங்கள் பரிந்து//ரை செய்ய முடியும்.

இந்தத் தகவல் மிகவும் ரகசியமாகக் கொடுக்கப்படுகிறது. இது குறித்து நாங்கள் எந்தப் பொ///றுப்பும் ஏற்றுக்கொள்ளத்தயாராய் இல்லை. தகவலை இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

தங்கள் நம்பிக்கையுள்ள (7)